**இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திப் பேரவை**

---

## 1 நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 அபிப்பிராயம்

---

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திப் பேரவையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திப் பேரவையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 1,675,436 கிரயமாகவும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இயலளவுப் பெறுமதி பூச்சியமாகவும் காணப்பட்ட சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியம இல. 18 இன் பிரகாரம் மீள் பெறுமதியிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 2005 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கான பதிலாக 2010 ஆம் ஆண்டின் போது அந் நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு 2010 நவம்பர்

25 ஆம் திகதி வரிசை அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க மூலதன மானியமாக சபைக்குக் கிடைத்துள்ள ரூபா 4,221,040 தொகை இலங்கை கணக்கீட்டு நியம இல. 24 இன் பிரகாரம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------

ஆண்டின் போது செலுத்தப்பட்ட பணிக்கொடைப் படி, அவ் ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 91,440 ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இவ்வாறே 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்ட பணிக்கொடை படிகளை எதிர்காலப் பொறுப்புக்களை எதிர்கொள்ளக் கூடியவகையில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------

நிலையான செத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிராமையால் சபையின் ரூபா 6,170,293 கிரயமான நிலையான சொத்துக்கள் சரியாகவும் அவை இடங்களில் வைத்திருத்தல் தொடர்பாக முறையாக ஆய்வு செய்யப்பட முடியாதிருந்தது.

**1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

---

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) **அதிகாரச்சட்டம்** | |
| 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு | வருடம் ஆரம்பிக்கப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வருடாந்த வரைவு அறிக்கையினை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு மதிப்பீடு பணிப்பாளர் சபையினால் 2010 நவம்பர் 23 ஆம் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| **(ஆ) சுற்றறிக்கை** | |
| 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 5.1.2 ஆம் உப பந்தி | கடந்த மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவு தொடர்பான மீளாய்வு 2010 – 2014 காலப் பகுதிக்காகத் தயாரிக்கப்பட்டு கூட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, எய்தப்பட வேண்டிய இலக்குகளின் |

நிதிப் பெறுமதி காண்பிக்கப்பட்டிராமையால் வருடாந்த செயல்முன்னேற்றத்தினை நிதிசார் ரீதியாக மதிப்பிடுவதற்கு முடியாதிருந்தது.

(ii) 5.1.3 ஆம் உப பந்தி

கட்டுப்பாட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட கூட்டுத்திட்டம் அடுத்துவரும் நிதியாண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 5.2.6 ஆம் உப பந்தி

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானச் செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறான பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை என்பன தயாரிக்கப்பட்டு பாதீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 6.5.1 ஆம் உப பந்தி

நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்கு முன்னர் வருடாந்த வரைபு அறிக்கை மற்றும் கணக்குகள் வரிசை அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கான பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2005 ஆம் ஆண்டு முதல் 2011 யூன் மாதம் வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 7.4.2 ஆம் உப பந்தி

சிரேஷ்ட முகாமைத்துவக் குழு ஒன்று தேசிய பேரவையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி, செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் போது பேரவையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ரூபா 1,563,052 மிகையாக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 570,172 ஆக இருந்ததனால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 2,133,224 ஆன இலாப நிலை காண்பிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ஊழியர் ஊதிய மற்றும் அபிவிருத்தி செயற்திட்டச் செலவினம் ரூபா 2,993,061 ஆல் அதிகரித்திருந்த போதிலும் அரசாங்கத்தின் மீண்டெழும் மற்றும் மூலதனப் பங்களிப்பு ரூபா 5,881,118 ஆல் அதிகரித்திருந்தமை இச் சாதக முரணுக்கு காரணமாகியது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 செயற்திறன்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பேரவையின் அடிப்படை நோக்கமான மனிதவள அபிவிருத்திக்காகச் செலவிடப்பட்ட தொகை, மொத்த மீண்டெழும் செலவின வீதமாக மிகக்குறைவான மீதியைக் கொண்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| ஆண்டு | மொத்த மீண்டெழும் செலவினம் | மனிதவள அபிவிருத்தி செலவினம் | மொத்த மீண்டெழும் செலவின சதவீதமாக மனிதவள அபிவிருத்திச் செலவினம் |
|---|---|---|---|
| | | | % |
| 2005 | 5,152,941 | 844,454 | 16.4 |
| 2006 | 5,868,600 | 692,147 | 11.8 |
| 2007 | 6,086,767 | 535,632 | 8.8 |
| 2008 | 6,728,939 | 659,801 | 9.8 |
| 2009 | 8,675,394 | 1,540,029 | 17,.7 |
| 2010 | 12,423,287 | 3,378,959 | 27,.2 |

2010 ஆம் ஆண்டின் போது மனிதவள அபிவிருத்திச் செலவினமாக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,378,959 இல் ஒரு செயற்திட்டத்திற்காக மாத்திரம் பத்திரிகை மற்றும் இலத்திரனியல் விளம்பரத்திற்காக ரூபா 2,406,016 உள்ளடக்கப்பட்டிருந்தது. அச் செலவினம் தவிர்ந்த மொத்த மீண்டெழும் செலவினத்திற்கு ஒப்பாக மனித வள அபிவிருத்திச் செலவின வீதமாக 7.8% குறைவான பெறுமதியாகக் காணப்பட்டது.

(ஆ) தரவு வங்கிகள் ஸ்தாபிக்கப்படுதல்

-----------------------------------------------------

1997 இன் 18 ஆம் இலக்க மனிதவள அபிவிருத்திக்கான இலங்கை தேசிய பேரவை அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தரவு வங்கி ஒன்று ஸ்தாபிக்கப்படும் நோக்கத்தை எய்துவதற்காக நாடெங்கிலும் பல்வேறு திறமைகளைக் கொண்ட நபர்களின் தகவல்களைச் சேகரிப்பதற்காக முதலாவது மாதிரி ஆய்வாக கடுவல மாலம்பே வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டு இது 2010 மார்ச் 21 ஆம் திகதி நடாத்தப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வுத் தினமாகிய 2011 மே 09 ஆம் திகதியில் முதலாவது மாதிரி ஆய்வு நடாத்தப்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அந் நோக்கத்தை எய்துவதற்காக வேறு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பாடநெறிகளை விட்டுச்சென்ற மாணவர்கள் தொடர்பான ஆய்வு

-------------------------------------------------------------------------------------------------

தொழிற்பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுனர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை மற்றும் தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் ஆகிய நிறுவகங்களுடன் தொடர்பான அப் பாடநெறிகளைப் பின்பற்றும் மாணவர்கள் இடைநடுவில் அப் பாடநெறிகளை விட்டுச் செல்வதற்கான காரணங்கள் தொடர்பான மீளாய்வினை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு 2010 சனவரி 01 ஆம் திகதி பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவருடன் உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. உடன்படிக்கை நிபந்தனைகளின் படி உரிய அறிக்கை 2010 ஏப்ரல் 10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 சனவரி 05 ஆம் திகதி வரைபு அறிக்கை மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இறுதி அறிக்கை

2011 மே 09 ஆம் கணக்காய்வுத் திகதி வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கான ரூபா 400,000 ஆன ஏற்பாட்டில் 2010 ஆம் ஆண்டில் ரூபா 76,875 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) எப் - 3 நிகழ்ச்சித்திட்டம்

-----------------------------------------

மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டம் கபொத உயர்தர மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளில் சித்திபெறத் தவறி நிர்க்கதியான மாணவர்கள், விசேட தொழிற்திறன் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி வழங்கப்பட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதற்காக கௌரவ அமைச்சரின் கட்டளையில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டமாகும். அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(i) 2010 ஆம் ஆண்டின் போது இலக்கிடப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 23,420 ஆன போதிலும் 9,737 மாணவர்கள் அல்லது 41.58% மாத்திரமே கலந்து கொண்டிருந்தனர்.

(ii) எதிர்பார்க்கப்பட்டவாறு 87,856 மாணவர்களுக்கு 2011 ஆம் ஆண்டின் முதலாவது மூன்று மாதங்களின் போது பயிற்சி வழங்கப்பட்டு வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்படாததுடன் ஆகக்குறைந்தது முதலாவது பயிற்சியில் கலந்துகொண்ட மாணவர்கள் 9,737 பேரின் தற்போதைய முன்னேற்றம் எவ்வாறு என்பது குறித்து 2011 மே 10 ஆந்திகதிய கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை பின்தொடர்நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2010 திசெம்பர் முதல் 2011 ஏப்ரல் வரை இச் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவுகள் ரூபா 5,601,870 தொகையானதுடன் இதில் விளம்பரத்திற்காக மாத்திரம் ரூபா 5,066,419 செலவிடப்பட்டிருந்தது. இது ஒட்டுமொத்தச் செலவினத்துடன் ஒப்பிடுகையில் 90% அளவினைக்

கொண்டிருந்தது. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 10% அல்லது ரூபா 535,451 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

**2.2.2 பணிப்பாளர் சபைக் கூட்டம்**

---

அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(அ) 1997 இன் 18 ஆம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திப் பேரவை அதிகாரச்சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை அங்கத்தவர்கள் 20 பேரைக்கொண்டிருக்க வேண்டிய போதிலும் நிதி, திட்டமிடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளர் மேற்குறித்த பிரிவின் பிரகாரம் உரிய நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திராததுடன் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 18 வரை வரையறுக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் 03 இயக்குனர் சபைக் கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றிருந்தன.

**2.2.3 செயற்பாட்டுத்திட்டம்**

---

2010 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத்திட்டம் பணிப்பாளர் சபையினால் 2010 நவம்பர் 23 ஆம் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதாவது மீளாய்வாண்டு பூர்த்தியடைவதற்கு ஒரு மாதம் இருக்கையிலாகும்.

**2.2.4 உள்ளகக் கணக்காய்வு**

---

பேரவையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று பேணப்பட்டிராததுடன் வரிசை அமைச்சாகிய இளைஞர் விவகார தொழிற்திறன் அபிவிருத்தி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் பேரவையின் நடவடிக்கைகள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட செலவுகளுக்கும் உள்ளபடியான செலவுகளுக்கும் இடையே முரண்களைக் கருத்திற்கொள்கையில் 06 செலவின விடயங்கள் தொடர்பாக முரண்கள் ரூபா 4,108,870 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

(அ) வழங்கல்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு

(ஆ) கூட்டுத்திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டத் தயாரிப்பு

(இ) வருடாந்த அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமாப்பித்தல்

(ஈ) உள்ளகக் கணக்காய்வு